செ.வெ.எண்: 803/2016 நாள்: 16.11.2016

**கன்னியாகுமரி சிறப்பு நிலை பேரூராட்சியில்**
**2016-17-ஆம் ஆண்டு 17.11.2016 முதல் 20.01.2017 முடிய உள்ள காலத்தில்**
**ஐயப்ப பக்தர்கள் மற்றும் சுற்றுலா பயணிகள்**
**கன்னியாகுமரிக்கு வருகை புரிவதை முன்னிட்டு,**
**அனைத்து துறை அலுவலர்களுடன் முன்னேற்பாடு நடவடிக்கை குறித்த ஆய்வுக்கூட்டம்**
**மாவட்ட வருவாய் அலுவலர் திரு. சோ. இளங்கோ அவர்கள் தலைமையில்**
**இன்று (16.11.2016) நடைபெற்றது.**

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள கன்னியாகுமரி சிறப்பு நிலை பேரூராட்சியில் 17.11.2016 முதல் 20.01.2017 முடிய உள்ள காலத்தில் ஐயப்ப பக்தர்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் அதிகமாக கன்னியாகுமரிக்கு வருகை தருவதை முன்னிட்டு, முன்னேற்பாடு நடவடிக்கை குறித்த ஆய்வுக்கூட்டம் வருவாய்த்துறை, பேரூராட்சிகள் துறை, காவல்துறை, மருத்துவம் மற்றும் ஊர நலப்பணிகள் துறை, சுகாதாரத்துறை, இந்து அறநிலையத்துறை, தீயணைப்புத்துறை, பொதுப்பணித்துறை, சுற்றுலாத்துறை, வணிகவரி துறை, போக்குவரத்துத்துறை, பூம்புகார் படகு போக்குவரத்துத்துறை, உணவு பாதுகாப்புத்துறை, ஹோட்டல் தமிழ்நாடு, ஆவின் பாலகம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், மின்வாரியத்துறை, தேசிய மாணவப்படை ஆகிய துறை அலுவலர்களுடன் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. சோ. இளங்கோ அவர்கள் தலைமையில், ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக சிறு கூட்டரங்கில் இன்று (16.11.2016) நடைபெற்றது.

கூட்டத்தில் துறைவாரியாக மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாடு நடவடிக்கைகள் மற்றும் அவசர கால நடவடிக்கைகள் குறித்து தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில் இந்து அறநிலையத்துறை இணை ஆணையர் திருமதி. பி. பாரதி, உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) திரு. முத்துக்குமார், நாகர்கோவில் கோட்டாட்சியர் திரு. ஆர். ராஜ்குமார், காவல்துறை துணை கண்காணிப்பாளர் திரு. இரா. வேணுகோபால், சுற்றுலா அலுவலர் திரு. ஆ. நெல்சன், மாவட்ட வணிக வரி அலுவலர் திரு. செ. ராஜகோபால், அகஸ்தீஸ்வரம் வட்டாட்சியர் திரு. எ.வி. மூர்த்தி, வட்டார போக்குவரத்து அலுவலர் திரு. ஆர்.ரஜினிகாந்த், பூம்புகார் படகு போக்குவரத்து கழக மேலாளர் திரு. வின்ஸ்லி ராய், ஆவின் பொது மேலாளர் திரு. சுந்தர மகாலிங்கம், கன்னியாகுமரி சிறப்புநிலை பேரூராட்சி செயல்அலுவலர் திரு. திருமலைக்குமார் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.